உங்கள் சகல விதமான வாகன உதிரிப் பாகங்களுக்கும் சேவைகளுக்கும் நம்பிக்கை யான இடம்
VEE KAY AUTOS
Parts & Services
M.O.T. While -U Wait
Parts: 081- 806 2294/5 76,Stamford Hill London N16
Service: 081- 806 1965 48, Belfast Road London N16

# அகதி

TAMIL REFUGEE CENTRE

சட்டத்தரணிகளின் தேவைக்கு
SOORII & MEHALA
(SOLICITORS)
1st Floor, 229 Upper Tooting Road, London SW17
Tel: 081 - 767 9666
For Advice & Assistance on all Immigration matters
Also: * Criminal, Civil & Matrimonial Litigation
* Conveyancing * Liquor Licensing
* Wills & Probate * Police Station Advice
& Assistance * Legal Aid

புதிய பிரித்தெடுக்கும் நடவடிக்கை ஆரம்பம். 3,125 விண்ணப்பங்களில் 2,135 நிராகரிப்பு

## தஞ்சம் கோரிப் போலி விண்ணப்பங்கள்! திட்டமிட்ட மோசடியா?

பிரித்தானிய உள்நாட்டு அலுவல்கள் திணைக்களம் இந்நாட்டுக்குள் தஞ்சம் கோரி விண்ணப்பம் செய்தவர்களை நேரடியாகஅழைத்து அவர்களது விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதற்கும் அடையாளங்களை உறுதிப்படுத்துவதற்கும் வசதியாகப் பிரித்தெடுக்கும் (Screening Unit) பிரிவு ஒன்றை அறிமுகம் செய்து செயற்படுகின்றது.

கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இப்பிரிவு ஜனவரி முதல் வாரப்பகுதி வரை 4,600 விண்ணப்பதாரிகளை நேரடி விசாரணைக்கு அழைத்திருந்தது. ஆனால் இத்தொகையில் 3,800 விண்ணப்பதாரிகள் விசாரணைக்குச் சமூகம் தரவில்லை. அவர்களுக்கு மற்றொரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்ட போது 3,381 பேர் சமூகம் கொடுக்கவில்லை. இதனால் குடிவரவு இலாகாவின் நடைமுறைக் கோட்பாடுகளின் 101வது விதிகளின் படி இவ்வாறு நேர்முகவிசாரணைக்கு சமூகம் கொடுக்காதவர்களின் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கிடமேற்பட்டுள்ளது.

* தொடர்ச்சி மறு பக்கம் *

உள்ளே...... ஐரோப்பாவில் அகதிகளுக்கெதிரான நடவடிக்கைகள்



தமிழ்ப் பெண்ணொருவர் பலவந்தமாக விமானத்தில் ஏற்றப்படுகின்றார். விபரம் 5ம் பக்கம்.....

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

அகதிகளின் செய்திகளைத் தாங்கி லண்டனில் இருந்து வெளிவரும் பிரசுரம் - 30 p அன்பளிப்பு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# AHATHY

ஜூன் - ஜூலை 92 - பிரசுரம் 2


அகதியின்

## எண்ணத்தில்......

அகதி முதலாவது இதழை வாசித்து விட்டுப்பல தமிழ் அன்பர்கள் தங்கள் அபிப்பிராயங்களைக் கடிதமூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் தெரிவித்துள்ளார்கள். அரசியல் கலப்பில்லாத வகையில் அகதி வெளிவந்துள்ளதைப்பலரும் பாராட்டி உள்ளனர். அனைவருக்கும் எமது நன்றிகள்.

தமிழ் அகதிகள் நிலையம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட போது அகதிகள் சம்பந்தப்பட்ட செய்திகளை மட்டும் கொண்டவொரு பத்திரிகை வெளியிடப்பட வேண்டு--மெனப்பலர் அபிப்பிராயம் தெரிவித்ததோடு தாங்கள் ஒத்துழைப்பையும் தருவதாக உறுதியளித்தனர். இதனையடுத்துக் குறுகிய கால ஏற்பாட்டில் வெளிவந்த பத்திரிகையில் பல தவறுகளும் இடம் பெற்றுள்ளன. அவைகள் தவிர்க்க முடியாதவையே.

பத்திரிகையின் வெளியீட்டு விழா கடந்த மாதம் 24ம் திகதி நடைபெற்ற போது பெருந்தொகையான தமிழ் அன்பர்கள் சமூகம் தந்து தங்கள் ஆதரவை நல்கினர்.

அகதியில் பக்கங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமென்றும் ,விளம்பரங்கள் குறைக்கப்பட வேண்டுமென்றும் சிலர் தெரிவித்தனர். ஆனால் விளம்பரங்களைக் குறைக்காது பக்கங்கள் அதிகரிக்கபட்டு இந்த இதழ் வெளி வருகிறது.

ஆம். அகதி முக்கியமாகப் புலம் பெயர்ந்தோரின் நலன்களை மட்டும் கருத்தில் கொண்டு தொடர்ந் தும் வெளிவரும்.


### அகதி ஆக்கம்

திரு கே.பி. சோமசுந்தரம், திரு கே.கனகசூரியம்
திருமதி பி.செல்வநாதன் செல்வி பி. நடராஜா
திரு பி.இளவழகன்

பிரசுரிப்போர்
தமிழ் அகதி நிலையம்
*256, Fore Street,*
*Edmonton, London N18 2TY*
*Tel: 081 887 0644*


## தஞ்சம் கோரி.......

முன்பக்கத்தொடர்ச்சி

கடந்த காலங்களில் சமூக சேவைகள் சமூக சேவைத்திணைக்களம் உட்பட ஏனைய அரசாங்க உதவிகளைத் துஷ்பிரயோகம் செய்வதாக வரும் செய்தி களை ஊர்ஜிதப்படுத்துவது போலத் திட்டமிட்டு ஒருவர் பல விண்ணப்பங்களைத் தயாரித்து அனுப் புவது மூலம் பலரது பெயர்களில் உதவிகளைப் பெற்று மோசடி செய்யப்படுவதாகச் சந்தேகிக் கப்படுகிறது.

அண்மையில் உள்நாட்டு அலுவல்கள் திணைக்களம் டிசம்பர் மாதத்திலிருந்து பெப்ரவரி மாதம் வரையான மூன்று மாத காலத்தில் மொத்தமாக 5,200 விண்ணப்பங்கள் பரிசீலனை செய்தது. இவற்றில் 183 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.இந்த 183 விண்ணப்பதாரிகளும் இந்த நாட்டுக்குள் வருவதற்கு முன் அடைக்கலம் தரக்கூடிய இன்னொரு நாட்டினூடாக வந்தார்கள் என்ற காரணத்திற்காக நிராகரிக்கப்ட்டது.

500 விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்த பின் நிராகரிக்கப்பட்டன. 137 விண்ணப்பங்கள் அகதி அந்தஸ்துப் பெற்றது. 1,200 விண்ணப்பதாரிகள் குடிவரவு விதிகளுக்குப் புறம்பான வகையில் இந்நாட்டில் தங்க அனுமதிக் கப்பட்டனர். இதில் கணிசமான அளவு தமிழ் அகதிகளும் அடங்குவர்.

எனவே நேர்முக விசாரணைக்கு அழைக் கப்படுபவர்கள் தவறாது சமூகம் கொடுக்கும்படி தமிழ் அகதி நிலையத்தினால் வேண்டப்படுகின்றனர். இது சம்பந்தமான உதவிகளைச் செய்வதற்கு தமிழ் அகதி நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### விமர்சனங்கள்

வாசகர்களிடம் இருந்து விமர்சனங்கள் வரவேற் கப்படுகின்றன.
ஆசிரியர்

**வெளிநாடுகளில் குறிப்பாக ஐரோப்பா நாடுகளில் இருந்து அகதிகள் பற்றிய செய்திகள், எமது மலரில் பிரசுரிக்க ஆர்வம் உள்ளோர் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**


Director,
Ahathy,
Tamil Refugee Centre,
256, Fore Street,
London N18 2TY
Tel: 081 - 887 0644 Fax: 081 807 5232


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகள் சட்டம் முற்ருகப் பரிசீலனை செய்யப்படலாம்

அகதிகள் சட்டம் திரும்பவும் கொண்டு வருவது பற்றிச்சென்ற வெளியீட்டில் குறிப்பிட்டிருந்தோம். புதிய உட்துறைச் செயலர் தனது பழைய சகா வான திரு கெனத் பேக்கரின் இச் சட்டம் சம்பந்த மான சரத்துக்கள் யாவற்றையும் திரும்பவும் மறுபரிசீலனை செய்வதாக அறியப்படுகிறது. இந்நடைமுறையின் போது இந்நாட்டிலுள்ள அகதிகளுக்காகப்பணி புரியும் நிறுவனங்களிடமிருந்தும் இச்சட்டமூலம் சம்பந்தமான கருத்துக் களையும் ஆலோசனைகளையும் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய உள்துறைச்செயலர் திரு கெனத் கிளார்க் அவர்கள் மிகவும் நிதானமாகவும் ஆறுதலாகவும் இப்புதிய சட்டத்தைப் பரிசீலனை செய்து தயாரிப்பார். அப்பொழுது அகதிகளைப் பாதிக்கும் விடயங்களையும் அவர்களது கஸ்டங்க ளையும் கவனத்தில் கொண்டு இச்சட்டத்திற்குப் புதிய வடிவம் கொடுப்பாரென எதிர்பார்க்கப் படுகிறது. சென்ற ஆண்டு இச்சட்டமூலம் கொண்டு வரப்பட்ட சூழ்நிலைக்கும் இப்பொழுது உள்ள சூழ்நிலைக்குமிடையே நிறைய வித்தியா சங்கள் காணப்படுவதால் கடுமையான சரத்துக் களைச் சேர்க்கக்கூடிய சந்தர்ப்பம் இல்லையென நம்பப்படுகிறது.

## தஞ்சம் கோரி விண்ணப்பித்தோரின் தொகையில் வீழ்ச்சி

அண்மையில் உள்நாட்டு அலுவலகம் வெளியிட்ட புள்ளிவிபரங்களின்படி சென்ற ஆண்டு மூன்று மாத காலத்தில் தஞ்சம் கோரி யோரின் தொகை 3725 எனவும் இந்த ஆண்டு இதே காலப்பகுதியில் விண்ணப்பம் செய்தோரின் தொகை 1725 எனவும் தெரிவிக்கிறது. இது கிட்டத்தட்ட 50 வீதம் வீழ்ச்சியாகும்.

## சட்டம் கொண்டு வருவதற்கு முன்பு எல்லோருடைய ஆலோசனைகளையும் பெறவும் - ARC

அகதி உரிமைக்கான பிரச்சார இயக்கம் உள்துறைச்செயலர் திரு கெனத் கிளார்க் அவர்களுக் குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளது. இக்கடிதத்தில் புதிய சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கு முன்பு சம் பந்தப்பட்ட ஸ்தாபனங்களுடன் ஆலோசனையைப் பெறுவது அவசியம் எனக் கேட்டுள்ளது. இது தொடர்பாக இந்த இயக்கம் புதிய சட்டங்களை விளக்கித்துண்டுப்பிரசுரங்கள், கருத்தரங்குகள் என்பவற்றை நடாத்தி சம்பந்தப்பட்ட ஸ்தாப னங்களுக்கு ஆலோசனைகளை வழங்கவுள்ளது.

# நிரந்தர வதிவுரிமை பெறும் தமிழ் அகதிகள்

**இந்நாட்டில் தஞ்சம் கோரி விண்ணப்பம் செய்து தொடர்ந்து ஏழு வருடங்கள் குடிவரவு விதிகளுக்குப் புறம்பான வகையில் விசா பெற்றவர்களுக்கு இப்பொழுது இந்நாட்டின் நிரந்தர வதிவுரிமையை குடிவரவுத் திணைக்களம் வழங்கி வருகிறது.**

தஞ்சம் கோரி விண்ணப்பம் செய்பவர்களுக்கு மூன்று விதமான அனுமதியைக்குடிவரவுத் திணைக் களம் வழங்கி வருவது தெரிந்ததே. அகதிகள் அந் தஸ்து வழங்கப்பட்டவர்கள் நாலாவது வருடவிசா முடிந்தபின் நிரந்தர வதிவுரிமையைப் பெறுவர். அதன் பின்பு ஒரு வருட காலத்தில் இவர்கள் பிரித் தானிய பிரஜைக்குரிய அந்தஸ்தைப்பெற விண்ணப் பிக்க முடியும்.

அகதி அந்தஸ்து வழங்கப்படாத மற்றவர் களுக்கு குடிவரவு விதிகளுக்குப் புறம்பான முறை யில் விசா வழங்கப்படுகிறது. இதில் முதலில் ஒரு வருடமாகவும் அதன் பின்பு மூன்று வருடமாக இரண்டு முறை விசா வழங்கப்படுகிறது. இவ்வாறு விசா வழங்கப்படுகின்ற ஏழு வருட முடிவு காலத் தில் இந்நாட்டில் நிரந்தர வதிவுரிமை வழங்கப் படுகிறது. இவர்கள் அகதி அந்தஸ்துப் பெற்ற வர்கள்போல ஒரு வருட காலத்தின் பின் இந்நாட்டின் அதாவது பிரித்தானிய பிரஜைக்கான அந்தஸ்துப் பெற விண்ணப்பம் செய்யலாம்.

இவர்களை விட எவ்வித அனுமதியும் பெறாது தற்காலிக அனுமதியில் வசிப்பவர்களுக்கு குடி வரவு விதிகளுக்குப் புறம்பான அனுமதி வழங்கல் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாக 6–14 மாத காலத்தில் குடிவரவுத் திணைக்களம் அகதிகளின் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து அவர்க ளுக்கு விசா வழங்கப் படுகிறது. இலங்கைத்தமிழ் அகதிகளைப் பொறுத்தவரையில் தற்போதைய நிலையில் இலங்கைக்குத் திரும்புவது என்பது பாது காப்பானதல்ல என்பதைக் கவனத்தில் கொண்டு அவர்கள் இந்நாட்டில் வாழுகின்ற தொடர்ச்சி யான காலத்தைக் கவனத்தில் கொண்டும் குடி வரவு விதிகளுக்குப் புறம்பான விசாக்கள் வழங் கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் புகலிடம் – வரலாறு

- க. சிறிதரன் -

தொடர் கட்டுரை

பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் கோருபவர்களை பிரித்தானியா தனது நாட்டினுள் அனுமதித்து வருவது தெரிந்ததே. 1951ம் ஆண்டு சுவிற்சிலாந்து நாட்டின் தலைநகரான ஜெனிவாவில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் பிரித்தானியா தன் நாட்டினுள் அகதிகளை அனுமதித்த போதிலும் 1951ம் ஆண்டின் முன்னைய காலப்பகுதியிலும் பிரித்தானியாவினுள் உட்புகுந்து அரசியல் தஞ்சம் கோரியவர்களை அனுமதித்தது குறிப்பிடத்தக்கது. அக்காலகட்டத்தில் அரசியல் தஞ்சம் கோரியவர்களின் விண்ணப்பங்களை நீதிமன்றங்களேபரிசீலித்து முடிவு செய்தது. ஆனால் காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணத்தினால் இவ்விண்ணப்பங்களைப்பரிசீலிக்கும் பொறுப்பு உள் நாட்டு விவகார அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது

1951ம் ஆண்டு ஜெனிவாவில் சில நாடுகள் சேர்ந்து எடுத்த முடிவின் அடிப்படையில் இந்த அகதிகள் சம்பந்தமான பிரகடனம் கைச்சாத்திடப்பட்டது. அப்போதைய காலகட்டத்தில் இப்பிரகடனமானது இரண்டாம் உலக மகாயுத்தத்தின் காரணமாக 1951ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதிக்கு முன்னர் ஐரோப்பாவில் நடைபெற்ற சம்பவங்களினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவி செய்யும் முகமாக இயற்றப்பட்டது. 1967ம் ஆண்டு இப்பிரகடனத்திற்குக் கொண்டு வரப்பட்ட ஓர் திருத்தம் காரணமாக இப்பிரகடனம் ஆனது 1951ம் ஆண்டின் முன்னர் இடம் பெற்ற சம்பவங்களினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்தவர்களுக்கு மட்டுமல்லாமல் அதன் பின்னர் இடம் பெற்ற சம்பவங்களால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்தவர்கட்கும் ஏற்புடையதாயிற்று. அது மட்டுமல்லாமல் முன்னர் இருந்த ஐரோப்பாவினுள் என்ற பூகோள ரீதியான கட்டுப்பாடு நீக்கப்பட்டமையால் மற்றைய நாட்டினைச் சேர்ந்தவர்களும் இப்பிரகடனத்தின் அடிப்படையில் இப்பிரகடனத்திற் கைச்சாத்திட்ட நாடொன்றில் அரசியல் புகலிட விண்ணப்பத்தைக் கோர முடிகிறது

இப்பிரகடனத்திற் கைச்சாத்திட்ட நாடுகளுள் பிரித்தானியாவும் ஒன்றாகும். ஆயினும் பிரித்தானியா இப்பிரகடனத்திற்கு தன் உள் நாட்டுச் சட்டத்தில் அந்தஸ்தையோ உடனடியாக வழங்கவில்லை. 1980ம் ஆண்டு அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட குடிவரவு விதிகளின் மூலம் 1951ம் ஆண்டின் பிரகடனத்திற்கு பிரித்தானியாவின் உள்நாட்டுச் சட்டத்தில் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. ஆனாலும் பிரகடனத்தின் முக்கிய அம்சங்கள் சிலவற்றிற்குப் பிரித்தானியாவின் உள்நாட்டுச்சட்டத்தில் இது வரை இடம் அளிக்கப்படவில்லை என்றே சட்ட நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

மேலும் இந்தப்பிரகடனத்தின் அடிப்படையில் அரசியல் தஞ்சத்திற்கு விண்ணப்பிப்பவர் எவரும் அதனை அவருக்கு உரித்தான ஓர் சட்ட ரீதியான உரிமையாகக் கொள்ள முடியாது. இப்பிரகடனத்தில் கைச்சாத்திட்ட நாடு கள் தத்தம் நாடுகளில் அரசியல் தஞ்ச விண்ணப்பத்தை யாரேனும் ஒருவர் மேற்கொள்ளும் போது அத்தகைய விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திடுவதன்மூலம் இறுதியாக விட்டுக் கொடுக்கவில்லை.

இப்பிரகடனத்தின் முதலாம் சரத்தில் எத்தகைய ஒருவர் அரசியல் தஞ்சத்திற்கான விண்ணப்பத்தை இப்பிரகடனத்தின் அடிப்படையில் மேற்கொள்ளலாம் என்று குறிப்படப்பட்டுள்ளது. அதாவது யாரேனும் ஒருவர் தன் இனம் அல்லது மதம் அல்லது ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவைச் சேர்ந்தவர் அல்லது அரசியல் அபிப்பிராயம் கொண்டவரென்ற காரணத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாலோ அல்லது பாதிக்கப்படலாம் என்ற நியாயமான பயம் கொண்டிருப்பதனாலோ பிறநாடொன்றில் இருந்து தன் சொந்த நாட்டிற்கு அல்லது தன் வதிவிட நாட்டிற்கு திரும்பிச் செல்ல முடியாதிருந்தால் அத்தகையவர் இப்பிரகடனத்தின் அடிப்படை யில் அகதி அந்தஸ்துக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னர் குறிப்பிட்டது போல இல்லாது அரசியல் விண்ணப்பம் கோருபவர் எவரும் இப்பிர கடனத்தின் அடிப்படையில் அத்தகைய விண்ணப்பத்தை மேற்கொள்ள ஓர் சட்ட ரீதியான உரிமையாகக் கருதலாகாது. அத்தகைய விண்ணப் பத்தை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை எந்த நாட்டில் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்ப டுகிறதோ அந்த நாட்டிற்கு உண்டு. ஆனால் இப்பிரகடனத்தின் 33ம் சரத்தினடிப்படையில் யாரேனும் ஒருவர் இப்பிரகடனத்தில் கைச்சாத்திட்ட நாடொன்றில் அரசியல் தஞ்சம் கோரிய பின் அத்தகையவர் தன் சொந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்பும் பட்சத்தில் அவரின் இனம் மதம் போன்ற 1ம் சரத்தில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஒரு காரணத்தினால் அவரது நாட்டில் பாதிக்கப்படுவார் எனக் கருதும் பட்சத்தில் அவரை அத்தகைய நாட்டிற்குத் திருப்பி அனுப்பக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாறு விண்ணப்பம் கோரியவர்கள் எவரும் அகதி அந்தஸ்துக்

தொடர்ச்சி 7 பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பாவில் அகதிகளுக்கெதிரான நடவடிக்கைகள்

- ஒரு கண்ணேட்டம் -

அண்மைக்காலமாக வெளிநாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் அகதிகளுக்கு எதிராக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை நோக்கும் போதுஅகதி என்ற பெயரே அகராதியிலிருந்து இல்லாமல் போய்விடும் என்ற ஐயம் இப்போது தோன்றியுள்ளது. அமைதியற்ற நிலைமையும் வறுமை அதிகரித்து வரும் இக்காலத்தில் நாட்டை விட்டு நாடு மக்கள் அகதிகளாகப் பெருமளவு இடம் பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளைச்சுற்றி வளைத்துள்ள நாடுகளில் ஏற்பட்டுள்ள அரசியல் பொருளாதார நெருக்கடி காரணமாக ஆயிரக்கணக்கான அகதிகள் ஐரோப்பாவிற்குள் நுழைகின்றனர். இதனுல் அனேகமான ஐரோப்பிய நாடுகள் தங்கள் கலாச்சாரப் பொருளாதார முற்றுகைக்குள் இருப்பதாக எண்ணத் தொடங்கியுள்ளனர். ஏற்கனவே சட்டவிரோதமாகக் குடியேறியோரையும் விடச் சட்டப்படி குடியேறியோரின் தொகை 12 மில்லியனுக்கு மேலாக அதிகரிக்கும் என நம்பப் படுகிறது. இப்பெருமளவிலான குடியேற்றத்தைத் தங்களால் சமாளிக்க முடியுமாவெனப் பல ஐரோப்பிய நாடுகள் வெளிப்படையாகவே கூறத் தொடங்கி விட்டனர்.

பல ஐரோப்பிய நாடுகளின் எல்லைகள் வெளிநாட்டவர் போகக் கூடிய இலகுவான பாதையாக அமைந்திருப்பதனுல் எல்லைக் கடவைகளை மூடியும் மூடவும் உள்ளனர். ஐக்கிய அமெரிக்காவின் ஒரு பாரம்பரிய கருத்தான பிறநாட்டவர் வருகை ஒரு கலாச்சார செழிப்புக்கும் பொருளாதாரப் புத்தெழுச்சிக்கும் வழி வகுக்கும் என்று நம்பிய அரசு இப்போது அங்கேயும் குடிவருவோரைக் கட்டுப்படுத்தும் போக்கில் நடந்து கொள்வதைச்சுட்டிக் காட்டத் தொடங்கி யுள்ளன.

இது இவ்வாறு இருக்க ஐரோப்பிய நாடுகளின் குறிப்பாக மேற்கு ஐரோப்பிய நாடுகளின் வயதானவர்கள் கூடிய சனத்தைக் கொண்டதாகவும் குழந்தைகளின் பிறப்பு வீதம் குறைவானதாகவும் இருந்தால் குடிவரவைக்கட்டுப்படுத்தக்கூடாதென வாதிடுகின்றனர். அது மாத்திரமன்றிப்பல வெளி நாட்டவர்கள் செய்து வருகின்ற தொழில்களை அவர்களே செய்ய வேண்டுமெனவும் உள் நாட்டவர்கள் இத்தொழிலைச் செய்யத் தயங்குகிருர்கள் எனவும் கருதுகின்றனர். அண்மையில் பிரான்சு நாட்டில் செய்யப்பட்ட ஒரு மதிப்பீட்டிலிருந்து 100,00 – 2,500,000 வரையிலான புதிய குடிவருவோரை வேலைகளுக்காக நியமிக்க வேண்டுமெனக் கணிப்பிட்டுள்ளார்கள். அரசியல் புகலிடத்தைப் பொறுத்தமட்டில் ஐக்கிய அமெரிக்க நாடுகளை விட ஐரோப்பிய நாடுகளில் தான் கூடிய பெருக்கத்தை எதிர் நோக்குகின்றன. பல நாடுகளின் கணக்கெடுப்பின் படி சட்ட விரோதமாகக் குடியேறுவோர் அரசியல் புகலிடம் என்ற போர்வையில் நாட்டுக்குள் நுழைகின்றனர் என அவதானிக்கப்படுகின்றது.

பல ஐரோப்பிய நாடுகள் அந்தரங்கமாகவும் வெளிப்படையாகவும் அகதிகளின் வருகையைக் குறைப்பதற்கோ அல்லது முற்ருகத் தடை செய்வதற்கோ ஏற்ற வகையில் புதிய சட்டங்களையும் பிரமாணங்களையும் கொண்டு வருகின்றன. அஸ்ரியா நாட்டில் தனது காவல் படைகளைக் கொண்டு எல்லைக்கடவைகளைக் காவல்படுத்துகின்றன. ஜேர்மனியில் அகதிகளை இரண்டு வார காலத்தில் விசாரணை செய்து திருப்பி அனுப்புவதற்குரிய நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன. பல நாசிதோல் தலைக்குழுக்கள் வெளி நாட்டவர்களுக்கெதிரான வன்செயல்களில் ஈடுபடுகின்றன. அரசாங்கங்களோ இந்நிகழ்ச்சிகளைப் பார்த்தும் பாராமல் இருக்கின்றன. வெளி நாட்டவர் வருகையை ஆதரித்து வந்த சில சோசலிச அரசியல்வாதிகள் இப்பொழுது வெளிப்படையாகவே எதிரான கொள்கையை வெளியிடு கின்றனர். பிரான்ஸ் நாட்டில் பென் என்பவர் தேசிய முன்னணிக்குத் தலைமை தாங்கி அண்மையில் நடந்த தேர்தலில் வெளிநாட்டவர் பற்றிய பிரச்சனைகளை முன்வைத்து 15 வீத வாக்குகளைப் பெற்றிருக்கிருர். அஸ்ரியா நாட்டில் சக்தி வாய்ந்த தீவிர வலது சாரி சுதந்திரக்கட்சி அகதிகளுக்கெதிரான பிரச்சனையை வைத்து 23 வீதம் ஆதரவைப் பெற்றிருக்கிறது. பெல்ஜியத் திலும் பிறநாட்டவர் வருகைக் கெதிரான கட்சிகள் மக்களின் பெரும் ஆதரவைப் பெற்றி ருக்கிருர் கள்.

அண்மையில் ஏற்பட்டுள்ள ஐரோப்பிய சமூகத்தின் அங்கத்துவ நாடுகள் வெளிநாட்டவர் வருகையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கின்றன. இப்போது அரசியல் தஞ்சம் கோரித் தனித்தனியாக விண்ணப்பம் செய்யலாம். ஆனுல் 1993ம் ஆண்டுக்குப்பின் ஒரு விண்ணப் பத்தை மாத்திரமே அங்கத்துவ நாடுகளுக்குச் செய்ய முடியும். அங்கத்துவ நாடு ஒன்ருல் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் இன்னு மொரு நாட்டுக்கு விண்ணப்பிக்க முடியாது. இந்நடைமுறை பாரம்பரியமாக பேணப்பட்டு வந்த ஐக்கிய நாடுகளின் ஜெனிவா ஒப்பந்தத்திற்கு மாருன செயல் எனப் பல சர்வ தேச ஸ்தாபனங்கள் கருதுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ● உங்கள் கேள்வியும் ?

● நான் இந்நாட்டுக்கு வந்து தஞ்சம் கோரி விண்ணப்பம் செய்து இரண்டு வருடத்திற்கு பின்பு சென்ற மாதம் விசா கிடைத்துள்ளது. என்னிடம் பாஸ்போட் இல்லை. எனது படம் இணைத்த பத்திரத்தில் ஒரு வருடத்திற்கு விசா தரப்பட்டுள்ளது. நான் வெளிநாட்டுக்குச் சென்றால் திரும்பி வரும் பட்சத்தில் புதிய விண்ணப்பதாரியாக ஏற்றுக் கொள்ளப்படலா மெனத் தெரிவிக்கப்படுகிறது. நான் அவசரம் ஐரோப்பிய நாடொன்றுக்குப் போக வேண்டும். நான் போக முடியுமா?

திரு.தங்கராசா ஹரோ

●● ஆம். நீங்கள் போய்வர முடியும். உங்கள் கடிதத்தில் தரப்பட்டுள்ள நடைமுறை விதி இதுவரை காலமும் எழுத்தில் தெரிவிக்கப்படவில்லையே தவிர அந்த விதி இங்கு அகதிகளாக அதாவது பிரித்தானிய அந்தஸ்துப் பெறுத ஒவ்வொருவருக்கும் பொருந்தும். நீங்கள் வெளிநாட்டுக்குப் போய்வரும் போது நீங்கள் சென்ற நாடு உங்கள் சொந்த நாடாக இருந்தால் அல்லது எந்த நாட்டுக்கு எதிராகத் தஞ்சம் கோரியுள்ளீர்களோ அந்த நாட்டிற்குப் போய் இருந்தால் அல்லது பிரித்தானியாவின் நலன்களுக்குப் பாதகமாக நீங்கள் ஏதாவது நடவடிக்கைகளில் பயணம் செய்த நாட்டில் ஈடுபட்டதாகத் தகவல் கிடைத்திருந்தால் மாத்திரம் கடவையில் உங்களைத் தடுத்து விசாரணை செய்யவோ அல்லது உங்களை இங்கு நுழைய விடாது தடுக்கவோ அல்லது உங்கள் வரவை புதிய விண்ணப்பமாகக் கவனத்தில் கொள்ளவோ குடிவரவுத்திணைக்கள அதிகாரிகளுக்கு அதிகாரம் உண்டு. உங்களைப் பொறுத்தமட்டில் உங்கள் பயணம் மேற்குறிப்பிட்டவற்றில் சேராது என்பது உறுதியானல் நிச்சயம் நீங்கள் பிரயாணம் செய்யலாம். உங்களுக்குப் பிரயாணம் செய்யக் கடவுச்சீட்டு ஒன்று அவசியம் என்பது தெரிந்திருக்க வேண்டும். இது தொடர்பான ஆலோசனை தேவைப்பட்டால் தமிழ் அகதி நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

---

● எனக்கு வருகின்ற ஒக்டோபர் மாதத்துடன் 7 வருடத்திற்கான குடிவரவுத்திணைக்கள விதிகளுக்குப் புறம்பான வகையில் வழங்கப்பட்ட விசா முடிவடைகின்றது. இதன் பின்பு எனக்கு நிரந்தர விசாக் கிடைக்கும் எனக் கூறுகிருர்கள். அது உண்மையானல் அந்த விசாவைப் பெற என்ன செய்ய வேண்டும்?

கே.யோகானந்தன் ருற்றிங்

●● உங்கள் விசா முடிவடைவதற்கு இரு வாரங்களுக்கு முன்பு உங்கள் கடவுச்சீட்டை நேரடியாக குடிவரவுத்திணைக்களத்திற்குச் சென்று பெற முடியும். தபால் மூலம் அனுப்புவதாய் இருந்தால் பதிவுக் கடிதமாக கடவுச்சீட்டையும் அத்துடன் விண்ணப்பத்தையும் அனுப்பவும். உங்களுக்கு உரிய நிரந்தர விசாவை அவர்கள் அனுப்பு வார்கள். இதற்காக வென எந்த விசேடமான நடைமுறைகளையும் நீங்கள் கைக்கொள்ள வேண்டியதில்லை. இதே வேளை நீங்கள் இன்னுமொன்றை மனத்தில் கொள்ள வேண்டும்.அதாவது எந்த விதமான விசாவையும் வழங்கவும் மறுக்கவும் குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளுக்கு அதிகாரமுண்டு.

---

<u>குறிப்பு</u>

எமக்கு கிடைத்த அநேகமான கேள்விகள் இப்பகுதியில் குறிக்கப்பட்ட விடயங்களை ஒட்டியதாகவே இருந்தது. இதன் காரணமாக இவ்விரு கேள்விகளையும் தேர்ந்தெடுத்து பதில் தந்துள்ளோம்.

## உங்கள் கேள்வியும் எங்கள் பதிலும்

அகதிக்குக் கேள்விகளை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணப்படும் பத்திரத்தை வெட்டி கேள்வி களுடன் இணைத்து அனுப்பவும்.. ஒரு கேள்விக்கு ஒரு பத்திரத்தை மட்டும் உபயோகிக்கவும்.

பெயர்-

விலாசம்-

தொலைபேசி இல-

முகவரி
The Editor,
Ahathy
Tamil Refugee Centre,
256, Fore Street, London N18 2TY

# ●● எங்கள் பதிலும் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாசகர் கடிதம்

## அகதி வெளியீடு அவசியமானது

அகதி முதல் வெளியீடு பார்வையிட்டேன். முயற்சி வரவேற்கத்தக்கது. அமதிகள் பற்றிய விடயங்கள் இடம்பெற வேண்டும்.

பிரித்தானியா நாட்டில் 15,000 இற்குமேற்பட்ட தமிழ் அகதிகள் வாழ்கிறார்கள். இவர்களுக்குப் பல்வேறு பிரச்சனைகள் உண்டு. இப்பிரச்சனைகளை எடுத்துக் கூற தனியான வெளியீடுகள் இதுவரை வெளிவரவில்லை.

தமிழ் அகதிகளின் பிரச்சனைகளைச் சரியான முறையில் அணுகி அவர்களின் நல்வாழ்வுக்கும் எதிர்கால சுபீட்சத்திற்கும் ஆலோசனைகளும் அறிவுரைகளும் வழங்கலாம். இது தமிழ்ச்சமுதாயத்திற்குச் செய்யும் பெரும் சேவையாகும்.

அகதிகளின் சோக நிகழ்வுகளை தொடர்ச்சியாக வெளியிடலாம். அகதிகளின் தேவைகள், நலன்புரி வசதிகள் என்ன? எப்படிப் பெறுவது ? என்பன இதன் மூலம் விளங்க வைக்கலாம். அகதிகளாக உள்ள தமிழ் இளைஞர்கள் அவர்களது கல்வியைத் தொடர்வதற்கு இதன் மூலம் அறிவுரை புகட்டப் பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் பலர் பிரித்தானியாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் வாழ்கிறார்கள். இவர்களது விவரங்களைத் திரட்ட அகதி போன்ற வெளியீடு அவசியம்.அரசியல் புயலுக்குள் சிக்காது அகதிகளுக்கான புனித பணி புரியும் வெளியீடாக இது வெளிவர வேண்டும் என்பது எல்லோரது அபிப்பிராயமாகும். இவ்வெளியீடு சிறப்புடன் வெளிவர சகல தமிழர்களும் ஆதரவு நல்குவார்களாக.

இங்ஙனம்
ஐ.தி.சம்பந்தன்
செயலாளர்
பாதிக்கப்பட்ட ஊழியர் சங்கம் (யூ.கே)


# PIANO LESSONS

QUALIFIED TEACHERS GIVES
PIANO LESSONS
FOR BEGINNERS

CHILDREN AGE 5+ & ADULTS ARE WELCOMED

IF ANYBODY IS INTERESTED
PLEASE CONTACT MRS.M.ROHINI
**081 - 472 6477**


## தமிழ் அகதிகள் பற்றிய மதிப்பீடு

என்பீல்ட் சவுன்சில் பகுதியில் குடியிருக்கும் சகல தமிழ் அகதிகள் பற்றிய மதிப்பீடொன்றை தமிழ் அகதிகள் நிலையம் மேற்கொள்ள உள்ளது. இப்பகுதியில் வாழ்கின்ற தமிழ் அகதிகளின் நலன்களை எவ்வாறு சிறந்த முறையில் கவனிக்க முடியும் என்பதை அறியவும் அகதிகளுக்கு உதவி வழங்கும் நிறுவனங்களின் உதவியுடன் சிறந்த சேவையை வழங்கவுமே இம்மதிப்பீடு செய்யப்படுகின்றது. இம்மதிப்பீடு பற்றிய கேள்விக் கொத்து ஒன்றை ( Questionaire )TRC இல் இருந்து பெற்றுக் கொள்ளலாம்


விபரங்களுக்கு
Dr.Mahendran
Incharge - Information Unit
TRC
256, Fore Street,
London N18 2TY


## அரசியல் புகலிடம்

தொடர்ச்சி

கோரிய நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிப்பார் எனக் கருதப்பட்டால அத்தகையவரை அந்த நாட்டிற்கு அல்லது வேறோர் நாட்டிற்குத் திருப்பி அனுப்ப அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.

தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவிஸ் அரசு அகதிகளுக்கு விரல் அடையாளம் எடுக்கிறது

தன்னுடைய நாட்டில் இருந்தோ அல்லது வெளிநாடு ஒன்றிலிருந்தோ தஞ்சம் கோரி சுவிஸ் நாட்டிற்குள் நுழையும் அகதிகளுக்குக் கைவிரல் அடையாளம் எடுக்கும் ஒரு புதிய முறையை சுவிஸ் அரசு அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் சுவிஸ் நாட்டில் தஞ்சஞ்கோரி வருபவர்கள் வேறுநாடொன்றுக்குச் சென்று தஞ்சம் கோரும் பட்சத்தில் இவ்வகதி பற்றிய அடையாளத்தைத் தெரிந்து கொள்ளவே இம்முறை கையாளப்படுகிறது. இதனால் அண்மை நாடுகளில் இருந்து தஞ்சம் கோரி சுவிஸ் நாட்டுக்குள் வரும் அகதிகளின் தொகை குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## ஜேர்மனியில் புதிய அகதிகள் சட்டம்

வருடந்தோறும் அதிகரித்து வரும் தஞ்சம் கோருபவர்கள் தொகையைக் கட்டுப்படுத்தவும் நீண்ட காலமாகத் தீர்மானிக்கப்படாமல் இருக்கும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து முடிவெடுப்பதற்கு ஏதுவாகப் பொன் பாராளுமன்றம் புதிய சட்டமூலதொன்றை நிறைவேற்றியுள்ளது. இவ்வருடம் இதுவரை 1,50,000 தஞ்சம் கோரும் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. பொதுவாக ஒரு விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்து முடிவெடுப் பதற்கு சராசரியாக 9 மாத காலம் எடுக்கின்றது. இக்காலப்பகுதியில் இத்தஞ்சம் கோரியோருக்கு உணவு. உடை. உறையுள் வசதி போன்ற முக்கிய அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் ஜேர்மன் அரசுக்குப் பெரிய நெருக்கடியைக் கொடுத்துள் ளது. புதிதாக 1,000 அதிகாரிகளை நியமித்து ஆகக்கூடிய 2 வார காலத்தில் விண்ணப்பம் பரிசீலனை செய்து முடிவெடுப்பதற்கும் இக்காலப்பகுதியில் தஞ்சம் கோருபவர்களை ஒரு பொது நிலையத்தில் தங்க வைத்திருப்பதற்கும் இச்சட்டத்தின் மூலம் வழி பிறக்கப்படுகிறது.

## கோட்டா முறையில் அகதிகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கொள்கை நிராகரிப்பு

ஐரோப்பிய சமூகத்தில் உள்ள நாடுகள் ஐரோப்பாவுக்குள் வாழும் அல்லது தஞ்சம் கோரும் அகதிகளை வரையறுக்கப்பட்ட கோட்டா முறையில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஜேர்மன் அரசின் புதிய கோரிக்கையை மற்றைய அங்கத்துவ நாடுகள் நிராகரித்து விட்டன. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தற்பொழுது அதிகரித்து வரும் அமைதியின்மை காரணமாக பெருமளவு அகதிகள் ஜேர்மன் நாட்டிற்குள் நுழைகிறுர்கள். இதுவரை 2,60,000 அகதிகள் தஞ்சம் கோரியுள்ளார்கள்.

## அவுஸ்திரேலியா குடிவரவைக் கட்டுப்படுத்தும்

வேலையில்லாப் பொருளாதாரப்பிரச்சனைகள் அதிகரித்து வரும் அவுஸ்திரேலியா நாட்டில் 92/93 ஆண்டுக்கான வெளிநாட்டவரைக் குடியமர்த்தும் தொகையை அதிகளவு குறைக்க இருக்கிறது. சென்ற ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட 25 % குடிவரவைக் கட்டுப்படுத்தும் திட்டம் அவுஸ்திரேலியாவில் கடந்த 20 வருட காலத்தில் இது தான் முதல் தடவை என்று கூறப்படுகிறது. இதேவேளை சீனுவில் ஏற்பட்ட கம்யூனிசத்திற்கு எதிரான புரட்சியில் ஈடுபட்டு நாட்டை விட்டு அவுஸ்திரேலியாவில் அகதிகளாக வந்து சேர்ந்த 30,000 பேரை நிரந்தரமாக கூடியமர அவுஸ்திரேலியா அரசு அனுமதி வழங்கியுள்ளது.

## அங்கும்

## போலந்து நாட்டவருக்கு இனி விசா இல்லை

அண்மையில் போலந்து நாட்டிற்கு விஜயம் செய்த பிரித்தானிய பிரதமர் ஜோன் மேயர் அவர்கள் போலந்து பிரித்தானிய உறவை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் அந்நாட்டில் இருந்து இங்கு வரும் போலந்துப் பிரஜைகளுக்கு விசா தேவையில்லை எனத் தெரிவிததுள்ளது.யூன் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் இந்த நடைமுறையில் வருடத்திற்கு 60,000 உல்லாசப் பயணிகள் பயனடைகின்றனர்.

## உண்ணுவிரதம் இருக்கும் கேடீஸ் அகதிகளுக்குச் சலுகை

தங்களது குடும்பங்களை துருக்கியில்விட்டுப் பிரிந்து பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பம் செய்திருக்கின்ற பல கேடீஸ் அகதிகள் தங்கள் விண்ணப்பங்களை உடன்விசாரணை செய்து முடிவெடுக்கும் படி கேட்டுக் கடந்த நான்கு வார காலமாக உண்ணுவிரதமிருந்து வருகின்றனர். குடிவரவுத் திணைக்களத்தின் தஞ்சம் அளிக்கும் பகுதி தஞ்சம் கோரும் விண்ணப்பங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசீலனை செய்து முடிவெடுக்கக் குறைந்தது 14 -18 மாத காலம் எதுக்கிறது. இதனால் இக் கேடிஸ் அகதிகள் தங்கள் விண்ணப்பங்களை உடன் பரிசீலனை செய்து தங்கள் குடும்பங்களைத் தங்களுடன் இணைவதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று பிரித்தானிய குடிவரவு அமைச்சர் திரு சார்ள்ஸ் வோர்டில் அவர்களுக்குவிண்ணப்பம் செய்து உண்ணாவிரதம் இருந்ததையடுத்து இமைச்சர் இடுத்த இரு வாரங்களுக்குள் முடிவெடுப்பதாக உறுதியளித்துள்ளார்

## தஞ்சம் வழங்கும் பிரிவுக்கு 500 அதிகாரிகள்

பிரித்தானியாவில் தஞ்சம் கோரிவோரின் விண்ணப்பங்கள் கிட்டத்தட்ட 63,000 பரிசீலனை செய்யப்படாமல் குடிவரவுத் திணைக்களத்தில் தேங்கிக் கிடக்கின்றன. இதனால் பெருமளவு தமிழர்கள் உட்படப் பலஆயிரம் தஞ்சம் கோரியோர் 2-3 வருட காலங்களுக்கு எவ்வித முடிவும் இல்லாமல் இருக்கிறார்கள். இந்நிலைக்குப் போதிய அதிகாரிகள் இப்பகுதியில் இல்லை என்பதை ஏற்றுக் கொண்ட அரசு இப்பொழுது 5,00 மேலதிக அதிகாரிகளை பரீட்சை அளித்து கடமைக்கு ஈடுபடுத்தி உள்ளது.

1988ம் ஆண்டு 50 அதிகாரிகளைக் கொண்ட இப்பிரிவு இப்பொழுது 5,50 அதிகாரிகளைக் கொண்டதாக உயர்ந்துள்ளது. 2 வருடத்திற்கு 1.7 மில்லியன் பவுண் இப்பகுதிக்குச் செலவாகியது. இப்பொழுது 10 மில்லியன் பவுண் செலவிடப்ப டுவதாகவும் குடிவரவுத் திணைக்களம் தெரி விக்கிறது. இவ்வருடம் முதல் 3 மாதத்தில் 6,000 விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து முடிவெ டுத்த இப்பகுதி இங்கு தேங்கிக் கிடக்கும் 60,000 விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்யப் பல வருடங்களாகலாமெனஎதிர்பார்க்கப்படுகின்றது.

## சன்றைஸ் வானொலியில் புலம் பெயர்ந்தோர்

கடந்த இரண்டரை வருடங்களாக பல்லாயிரக் கணக்கான தமிழ் நேயர்களை தனதாக்கி கொண்டிருக்கும் சன்றைஸ் வானொலியின் தமிழ் நிகழ்ச்சியில் புலம் பெயர்ந்தோர் குறிப்பாக அகதிகளின் பிரச்சனைகள் தொடர்பான நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

வாராந்தம் திங்கட்கிழமைகளில் இரவு 10.00 மணி முதல் 11,00 மணி வரை நடாத்தப்படும் தமிழ் நிகழ்ச்சியில் மாதத்தில் நான்காவது திங்கட்கிழமை பத்தரை மணியிலிருந்து அரை மணி நேரம் சமூகப் பலகணி என்னும் நிகழ்ச்சியை கடந்த ஒரு வருடமாக நடாத்தி வருகிறார்கள்.

இப்பகுதியில் சமூகத்துடன் தொடர்பான பல்வேறு துறைகளில் கல்வி, சுகாதாரம் இருப்பிட வசதி, போன்ற விடயங்களில் புலம் பெயர்ந்தோருக்கு ஏற்படும் பிரச்சனைகள் சம்பந்தப்பட்ட நிபுணர்களின் துணையுடன் நேரடித் தொலைபேசித் தொடர்பு இணைப்புடன் நேயர்கள் பங்களிக்கத் தக்க வகையில் இந்த நிகழ்ச்சி நடை பெறுகின்றது. கடந்த சில நிகழ்ச்சிகளில் விசேடமாக தமிழ் அகதிகள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை உள்ளடக்கியமை பலராலும் பாராட்டப்பட்டுள்ளது. கடந்த வாரம் சமூகப்பலகணியை தயாரித்துத் தொகுத்திருந்தார் இந்நிகழ்ச்சிக்குப் பொறுப்பான திரு நடா மோகன். இருந்தாலும் இந்த வானொலியின் ஒலிபரப்பு லண்டனில் குறிப்பிடப்பட்ட சில பகுதிகளில் மாத்திரம் தான் கேட்க முடியும் என்றும் தமிழ் அகதிகள் அதிகமாக வாழும் தென், கீழ் லண்டன் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள்.

இங்கும்

## தமிழ் அகதி ஆசிரியர்கள் பற்றிய மதிப்பீடு

பிரிட்டனில் அகதிகளாக வசிக்கும் இலங்கைத் தமிழ் ஆசிரியர்கள் பற்றிய மதிப்பீட்டைதமிழ் அகதி நிலையம் செய்கின்றது. ஆக்ககுறைந்தது ஒரு வருட காலம் இலங்கையில் அரசு தனியார் துறைகளில் ஆசிரியர் தொழில் புரிந்த சகலரிடம் இருந்தும் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

அகதிகளுக்கு உதவி புரியும் நிறுவனங்களிடம் இருந்து தமிழ் அகதி ஆசிரியர்களின் தொழில் வாய்ப்புக்களைஅபிவிருத்தி செய்யும் நோக்குடனேயே இம்மதிப்பீடு செய்யப்படுகின்றது.

இம்மதிப்பீட்டில் தங்கள் விபரங்களைச் சேர்க்க விரும்புவோர் சுய விலாசமிடப்பட்ட முத்திரையுடன் 9 X 6 " தபால் உறையுடன் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி

Mr.K.Kanagasooriam
Incharge - Teachers Information
TRC
256, Fore Street
London N18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் பக்கம்

தயாரிப்பு புவனு

## சமையற் குறிப்பு

### பால் அப்பம்

தேவையான பொருட்கள்
(4 பேருக்குப் போதுமான அளவு)
1 கப் பட்ஞ அரிசி
1கப் கோதுமை மா
1கப் துருவிய தேங்காய்ப்பு
1 தேக்கரண்டி அப்பச்சோடா
ஒரு தேக்கரண்டி ஈஸ்ட்
1 ரின் தேங்காய்ப்பால்(Fridge இல் வைத்து மிதக்கும் நீரை அகற்றி தடித்த பாலே எடுக்கவும்)
சுவைக்குத் தகுந்த அளவு உப்பு

செய்முறை

அரிசியை முதல் நாளன்று குறைந்தது 8 மணித்தியாலங்கள் தண்ணீரில் ஊற வைத்து துருவிய தேங்காய்ப்பூவுடன் கரகரப்பாக அரைத்தெடுக்கவும். அதனுடன் கோ துமைமா, அப்பச்சோடா, ஈஸ்ட் போன்றவற்றைச் சேர்த்து 2 கப் தண்ணீரி ல் கலந்து நன்ருகக் கட்டி படாமல் கலக்கி சூடான சூழலில் (Eg:-Yougerd maker ல் அல்லது Boiler cupboard ல்) புளிக்கவிடவும். அடுத்த நாள் சுவைக்கு ஏற்ற அளவு உப்புக் கலந்து ஒட்டும் தன்மையின்றி நன்ருகச் சுத்தம் செய்யப்பட்ட அப்பச் சட்டியில் அளவான சூட்டில் சிலாவியெடுக்கவும். அரைப்பதத்தில் 1தேக்கரண்டி தேங்காய்ப் பாலே நடுவில் விட்டு மூடியால் மூடிவிடவும். பால்வற்றியதும் இறக்கிப் பரிமாறவும். விரும்பினுல் பாலுக்குப் பதில் முட்டையும் சேர்க்கலாம். இதனே மிளகாய்ச் சம்பல் அல்லது சீனிச் சம்பலுடன் சாப்பிட மிகவும் ருசியாக இருக்கும்.

தொகுத்தளித்தவர்– ப.ராதா

**சமையற் குறிப்புக்கள் வரவேற்கப்படுகின்றன.**

தொடர்புகட்கு- **Magalir Pakkam**
**Ahathy**
**Tamil Refugee Centre**
**256, Fore Street**
**London N18 2TY**

## மணமக்கள் தேவை

### மணமகள் தேவை

1.. யாழ் இந்துமதக் குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதுடைய இலங்கைப் பட்டதாரி ஒருவருக்கு (மணமகனுக்கு) 25– 28 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை
M 1 C/O Ahathy

2. 35 வயதுடைய மட்டக்களப்பைச் சேர்ந்த மணமகனுக்கு 25-30 வயதுக்குட்பட்ட மணமகள் தேவைப்படுகிறது. கணக்காளர் துறையில் இறுதி வருடத்தைப் பூர்த்தி செய்யும் இவருக்கு ஓரளவு கல்வி கற்றவர் விரும்பத்தக்கது.
M 2 C/O Ahathy

மணமக்கள் தேவைப்பகுதிக்கு விபரங்கள் பிரசுரிக்க விரும்புவோர் 15 சொற்களுக்கு உட்பட்ட தகவல்களுக்கு £ 5.00 உம் மேற்பட்ட ஒவ்வொரு சொற்களுக்கும் 25p படியும் அன்பளிப்பாகச் செலுத்தவேண்டும்


**வீடு கொள்வனவு செய்வதற்கு கடனுதவி வேண்டுமா?**
**வியாபார ஸ்தாபனங்கள் ஆரம்பிக்கவும் , வாங்கவும் எவ்வித முதலீடுகளுக்கும் ஆலோசனை உதவிகள் பெற தொடர்பு கொள்ளவும்.**

**SAM VENUGOPAL** BSc (Hons)
Sales Associate
**Allied Dunbar Assurance plc**
Kenton Branch
8 Stanmore Hill, Stanmore
Middlesex HA7 3BQ
Telephone: 081-954 7411
Home Telephone: 081-903 3820

ALLIED DUNBAR

Appointed Representative of companies in the Allied Dunbar Marketing Group in relation to life assurance, pensions and investment products bearing Allied Dunbar's name only. All companies in the Group are members of Lautro; Allied Dunbar Unit Trusts plc is also a member of IMRO




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் அகதி நிலைய மகளிர் அணி

கடந்த 21.5.92 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.30 மணி யளவில் தமிழ் அகதிக்கூட்டம் நிலைய மண்டபத்தில மேற்பர மகளிர் அணியின் அங்குரார்ப்பண வைப வம் இடம் பெற்றது. தமிழ் அகதி நிலையத்தின் மகளிர் பகுதிக்கான இணைப்பொறுப்பாளர திருமதி துரைரட்ணம் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்க திருமதி கண்மணி பொன்னுத்துரை அவர்கள் மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார். தமிழ் அகதி நிலையத்தின் பல பெண் அங்கத்தவர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் மகளிருக்கான வேலை வாய்ப்புக்கள், வருமானத்தைப் பெருக்கக்கூடிய முயற்சிகள் பற்றி கலந்துரையாடப்பட்டன. சமையல் பகுதி, தையல் வேலை கை வேலைகள், முதலுதவி, குழந்தைப் பராமரிப்பு, சுகாதாரப பாதுகாப்பு உட்பட பல செயல் திட்டங்களில் மகளிரை ஈடுபடுத்துவது மட்டுமன்றி தேவையான செயல்முறை உதவிகளை இம்மகளிர் அணிமூலம செய்து கொடுப்பது பற்றியும் ஆராயப்பட்டது.

இச்சந்திப்புக்கள் எதிர்காலத்தில் மாதத்தின் முதல ஞாயிற்றுக் கிழமைகளிலும் காலை 11.30 மணிக்கு இம்மண்டபத்தில் இடம் பெறும் எனத தெரிவிக்கப்பட்டது. அடுத்த செயன்முறையுடன் கூடிய கலந்துரையாடல் எதிர்வரும் 5.7.92 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற இருப்பதாகவும ஆர்வம் உள்ளவர்கள் கலந்து கொள்ளும்படியும கேட்கப்படுகின்றனர்.




## அகதி தொடர்ந்து வெளிவர உதவுங்கள்

5.00 பவுண் (U.K) அன்பளிப்பாகச் செலுத்துவதன் மூலம் அடுத்த 12 மாத அகதி இதழ்களை உங்கள் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். வெளிநாடுகளில் இருப்பவர்கள் ஆகக்குறைந்தது 4.00 பவுண்களுக்குச்சமனான பணத்துடன் 12 இதழ்களுக்கான தபால் செலவையும் சேர்த்து அன்பளிப்பாகச் செலுத்துங்கள். அன்பளிப்பைக் காசோலையாகவோ அல்லது போஸ்டல் ஓடராகவோ கீழ்வரும பத்திரத்தையும் இணைத்து அனுப்புங்கள்.

காசோலை மணியோர்டர் Tamil Refugee Centre என்ற பெயருக்கு அனுப்புங்கள்

### DONATION

Full Name:
Address:

Tel No:
Donation Cheque/Postal Order:

Signature ______________ Date ______________

Director, Ahathy, Tamil Refugee Centre, 256, Fore Street, London N18 2TY U.K.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாட்டாவின் 3வது ஆண்டு நிறைவு விழா

தமிழ் மக்களின் கலை கலாச்சாரப் பாரம்பரியங்கள் பல்வேறு இனத்தவராலும் பாராட்டப்பட்டு வருபவை. தமிழன் எங்கு வாழ்ந்தாலும் எத்தனை இன்னல்கள் பட்டு வாழ்ந்து கொண்டிருந்தாலும் தமிழுக்கு விழா எடுப்பதையோ பாடசாலை ஆண்டு விழா கொண்டாட்டங்களை நடாத்துவதிலோ என்றும் எங்கேயும் பின்னின்றதில்லை. அந்த வகையில் வட இலண்டனில் சிறப்பாக தமிழ் பணி ஆற்றிவரும் எட்மன்ரன் ஆங்கிலோதமிழ் சங்கத்தின் மூன்றுவது ஆண்டு விழா கடந்த மாதம் 30ம் திகதி நடைபெற்றது.

எட்மன்ரன் நைற்றிங்கேல் சோல்ஸ்பரி பாடசாலையின் மண்டபம் அன்றையதினம் தமிழ் பெற்றோர்கள் இளைஞர்கள் யுவதிகள் கல்விமான்கள் சிறுர்கள் எனப் பல்வேறு வகையினராலும் நிறைந்து காணப்பட்டது.

வடலண்டன் ஆங்கிலோ தமிழ்ச் சங்கத்தின் கீழ் இயங்கும் கலாச்சாரப் பாடசாலை மாணவ மாணவிகளின் கடவுள் வணக்கத்தை அடுத்து பாடசாலை அதிபர் திரு S. கந்தசாமி அவர்கள் விழாவுக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று உரையாற்றினர். அதனையடுத்து எட்மன்ரன் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் இயன்றூவின் என்பீல்ட் கவுன்சிலர். திருமதி டொறின் மாடன் ஆகியோர் அங்கே சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். அங்கு உரையாற்றிய திரு இயன்றூவின் " எட்மன்ரன் பகுதியில் வாழும் தமிழ் மக்கள் இத்தகைய விழா ஒன்றை சிறப்பான முறையில் கொண்டாடுவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இதே போன்று எதிர்வரும் காலங்களிலும் சிறந்த பணியாற்றி உங்கள் சங்கங்களையும், பாடசாலையையும் வளர்க்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டு உங்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க நான் ஆவலாக இருக்கிறேன்" என்றுர். பாராளுமன்ற உறுப்பினரின் உரையை அடுத்து கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இடை இடையே பாடசாலைச் சிறுர்களின் பேச்சுக்களும் புகுந்து கொண்டன. நடன நிகழ்ச்சியைப் பொறுத்த மட்டில் சென்ற வருடத்தைப் பார்க்கிலும் இம்முறை மிகவும் பாராட்டப் படக்கூடிய வகையில் அமைந்திருந்தது குறிப்பாக " வண்டும் மலர்களும் " என்ற புதிய ஆக்கம் எல்லோருடைய மனதையும் கவர்ந்தது. மற்றும் மீனவ நடனமும் குறத்தி நடனமும் எமது கலாச்சாரத்தை பிரதிபலிப்பனவாக அமைந்திருந்தது. சென்ற வருடத்தை விட இம்முறை வாத்திய இசையில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது. பாடசாலை மாணவ, மாணவிகளின் நாடகங்கள் நடைபெற்றன. தொப்பிக்காரன் என்ற நாடகத்தில் குறிப்பிடக்கூடியதாக எதுவும் இல்லை. நீலச் சிற்றுடை என்ற நாடகத்தில் பங்கு கொண்ட மாணவிகள் பாராட்டக்கூடிய முறையில் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பாத்திரங்களைச் செய்தனர்.

நடன ஆசிரியை திருமதி. அன்னபூரணி சத்தியமூர்த்தி சிறந்த முறையில் தன் பணியை ஆற்றியிருக்கிறுர் என்பது இந்த நடனங்களின் மூலம் புலப்படுகிறது. சங்கீத ஆசிரியை செல்வி K. இராஜரட்ணமும் நிகழ்ச்சிகள் சிறப்புற உதவியுள்ளார்.

மேற்படி சங்கத்தின் செயலாளர் திரு எஸ் சிவச்சந்திரன் நன்றியுரை கூறினுர்.



லாட்டாவின் ஆண்டு விழாவை பிரபல வர்த்தக பிரமுகர் திரு காந்தருபன் அவர்கள் குத்துவிளக் கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் அவரது பாரியார் அதை அவதானிப்பதையும் படத்தில் காண்கிறீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ROOT இன் ஏற்பாட்டில் தமிழ் வர்த்தகர் மாநாடு

பிரித்தானியாவில் குறிப்பாக லண்டனில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் அல்லது வர்த்தகத்தில் ஈடுபடத்திட்டமிட்டுள்ள தமிழர்கள் நன்மையைக்கருதி அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் ROOT ஸ்தாபனம் ஒரு மகாநாட்டை நடாத்த முடிவு செய்துள்ளது.

இம்மகாநாட்டில் தமிழர்கள் பொதுவாக வர்த்தகத்தில் எதிர்நோக்கும் பிரச்சனைகள் உட்படப் பல விடயங்களை ஆராய்ந்து கருத்துப் பரிமாற்றம் செய்யப்படும்.

விசேடமாகப் பிரித்தானியாவில் உதவி வழங்கும் அரசாங்க தனியார் நிறுவனங்களிடம் இருந்து நிதியுதவி, தொழில்நுட்ப உதவி போன்றவற்றைத் தமிழர்களுக்கு எவ்வாறு இலகுவாக கிடைக்கச்செய்யலாம் என்பது பற்றி ஆராய்வதே முக்கிய நோக்கமென இம்மாநாடு ஏற்பாட்டாளர்களுள் ஒருவரான திரு வசந்தன் அவர்கள் குறிப்பிட்டார்.

இது பற்றிய தொடர்பான மேலதிக விபரங்களுக்குக் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

ROOT
2nd Floor,
Millmead Business Centre,
Millmead Road,
London N17 9Qu

## தமிழர் மருத்துவ கலாச்சார நிலையம் நடாத்தும் ஆரோக்கியம் சம்பந்தமான மதிப்பீடு

லண்டனில் அமைந்துள்ள தமிழ் மருத்துவ கலாசாலை (MIOT) இந்நாட்டில் வாழ்கின்ற தமிழர்களின் ஆரோக்கியம் சம்பந்தமான மதிப்பீடு ஒன்றை இப்போது செய்து கொண்டிருக்கிறது.

குறிப்பாகத் தமிழ் அகதிகளுக்குத் தேவையான மருத்துவங்கள் பற்றியும் அவற்றை அவர்கள் பெறுவதில் ஏற்படுகின்ற பிரச்சனைகளையும் அறிந்து அதற்குரிய தகுந்த பரிகாரத்தைத் தேடுவதே இம்மதிப்பீட்டின் நோக்கம்.

இம்மதிப்பீடு சம்பந்தமான கேள்விக்கொத்தைப் பெற விரும்புவோர் பின்வரும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளும் படி கேட்கப்படுகின்றனர்.

Medical Institute of Tamil (MIOT)
720, Romford Road,
London E12 6BT



லாட்டாவின் ஆண்டு விழாவில் வட இலண்டன் தமிழ்க்கலாசாலை மாணவிகள் பங்கு பற்றிய நடனக்காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஆர்வம் உள்ளவர்கள் 'அகதி' வெளியீட்டில் ஈடுபட்டுள்ளனர்'

**- வெளியீட்டு விழாவில் பேச்சு**

லண்டனில் இருந்து தமிழ் அகதிகளின் செய்திகளை மட்டும் தாங்கி வரும் 'அகதி' பத்திரிகையின் வெளியீட்டு விழா கடந்த மாதம் 24ம் நாள் லண்டன் வடக்கு எட்மன்ரனில் உள்ள தமிழ் அகதிகள் நிலைய அலுவலகத்தில் நடைபெற்றது. இலங்கைத்தமிழ் அகதிகளுக்கு ஏற்பட்டு வரும் பல் வேறு விதமான இழப்புக்களில் இருந்து அவர்கள் விடுபட வேண்டி அனுஷ்டிக்கப்பட்ட இரு நிமிட பிரார்த்தனையுடன் விழா ஆரம்பமாகியது. பிரித்தானியா அகதிகள் பணியகத்தின் திட்ட முகாமையாளர் திரு கணேசானந்தன் குத்து விளக்கேற்றினுர்.

வைபவத்திற்குத் தலைமை தாங்கிய திரு.கே.சிதம்பரநாதன் தமது தலைமையுரையில் தமிழ் அகதிகள் நிலையத்தின் வெளியீடாக 'அகதி' வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். குறுகிய கால ஏற்பாட்டில் பலரது ஒத்துழைப்பும் கிடைத்ததால் பத்திரிகை வெளியீடும் விரைவில் நடைபெறக்கூடியதாக இருக்கிறது. இப்பத்திரிகை வெளிவருவதற்கு உதவியாகப் பலர் இருந்தனர். அவர்களில் முக்கியமாக இப்பிரசுரத்தை அழகுற அச்சிட்டு வெளியிடும் Golden Printers ஸ்தாபனத்தினர் உட்பட அனைவருக்கும் தமிழ் அகதி நிலையத்தின் சார்பில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன் எனக்குறிப்பிட்ட அவர் லண்டனில் இருந்தும் வெளியிடங்களில் இருந்தும் பல பத்திரிகைகள் இப்போது வெளிவந்தவண்ணம் இருக்கின்றன. ஆனுல் அகதிகள் சம்பந்தப்பட்ட செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதைக் காண முடிவதில்லை. 'அகதி' அக்குறையை நீக்குமென எதிர்பார்க்கின்றேன் என்றர்.பத்திரிகையை வெளியிட்டு வைத்து உரையாற்றிய திரு கே.பி. சோமசுந்தரம் அவர்கள் அகதிகளின் தொகை எங்கும் அதிகரித்து வருகிறது. அகதிகளது பிரச்சனைகளைக் கவனிக்க ஒரு பத்திரகைை வேண்டுமென்ற நோக்கில் 'அகதி' வெளிவருகிறது என்ருர்.

வடலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கத்தின் செயலாளர் திரு எஸ் சிவச்சந்திரன் தனது ஆசியுரையின் போது தமிழ் மக்கள் எங்கிருந்தாலும் தமது சமூகத்தின் நலன்களைக் கவனிக்கத் தவறுவதில்லை.சங்கங்கள் அமைத்துத் தம்மாலான பணிகளைச் செய்தே வருகிருர்கள். அந்த வகையில் வட லண்டன் பகுதிகளில் இருந்து அகதிகளுக்காக வேலை செய்ய வெளிவரும் இப்பத்திரிகை வளர வேண்டுமென வாழ்த்துகிறேன் என்ருர். அவர் தொடர்ந்து பேசுகையில் பத்திரிகை ஒன்றைப் பொதுச்சேவைக்காக வெளியிடுவதனுல் வர்த்தக நோக்கமும் அரசியல் கலப்பும் இல்லாமல் இருந்தால் இம்முயற்சி நிச்சயம் வெற்றி பெறும் என்ருர்.

இதைத்தொடர்ந்து பத்திரிகை ஆசிரியரிடம் இருந்து முதலாவது வெளியீட்டை வர்த்தகப் பிரமுகர் திரு தியாகராஜா அவர்களும் 2வது மலரை லண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கச் செயலாளர் திரு சிவச்சந்திரன் அவர்களும் 3வது பிரதியை தமிழ் அகதி நிலைய மகளிர் அணி இணைப்பாளர் திருமதி துரைரட்டினம் அவர்களும் பெற்றுக் கொண்டார்கள்




பிரித்தானிய அகதிகள்பணியக திட்டமுகாமையாளர் திரு கணேசானந்தன் அவர்கள் அகதி வெளியீட்டு விழாவின் போது குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்


உங்களுக்குத் தேவையான சகல விதமான வீடியோ, புகைப்படச் சேவைகளுக்கு

A.G.R

Videocision

Video filming and photographs for Weddings, Birthdays, and Special Occasions

Contact 081 - 692 3866 081 - 347 8905




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கைவண்ணம்

## மீண்டும் அகதி – ஈழமண்ணில்

இளந் தென்றல்
வருதலிலே
ஈழமண் ஈன்றெடுத்த
தமிழ் மலர்களே
பிறப்பிடம் உங்களுக்கு
பிறரிடம் ஆகியது
மலர்விடம் உங்களுக்கு
மரணவிடம் ஆகியது
இயற்கையின் சீற்றத்தால் அல்ல
அனத்தின் சீற்றத்தால்
உரமாக வீசிய
புயல் ஒன்று
உங்கள் மீது
உரசியதால்

வீட்டிடம் விட்டு
விடுபட்டு
ஆகாயம் கடல் வழி
என அல்லல்பட்டு
தாயின் கருணை மிச்சும்
தாய் நாடாம் இந்தியாவில்
தஞ்சம் கொண்டன
தமிழ் மலர்கள்
அங்கும் ஓர் புயல் அடி
அடித்திடக் கண்டு
அல்லல் பட்ட மலர்கள்
மீண்டும்
அகதிகள் ஆயிற்று ஈழ மண்ணில்

– சிவா

உங்கள் கைவண்ணம் பகுதிக்கு ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. கதை ,கட்டுரை, கவிதை ஏன் உங்கள் அனுபவங்களையும் எழுதி அனுப்புங்கள். தகுதியானவற்றைப் பிரசுரிப்போம்.

–ஆசிரியர் –

**தமிழ் அகதிகள் குடும்பங்களுடன் இணையும் விடயத்தில் நியாயமும்** . . . . 16ம் பக்கத் தொடர்ச்சி

4 வருடங்களுக்கு மேலாகவும் ஒரு குடும் பத்தைப் பிரித்து வைத்திருப்பது நாகரிகமான செயல இல்லை என்பதைப் பிரித்தானிய மக்கள் உணர வார்கள்.எனவே இந்நாட்டுக்கு வந்து தஞ்சம கோரிய நாளில் இருந்து 4 வருடம் பூர்த்தியான சகல குடும்பங்களைப் பிரிந்திருக்கும் தமிழ அகதிகளைத் தங்கள் குடும்பங்கள் இங்கு வந்து இணைவ தற்கு அனுமதியை வழங்குவதற்குரிய நடவ டிக்கைகளை எடுங்கள் எனக்குறிப்பிட்ட அவர் மேலும் தமிழ் அகதி நிலையத்தில் அண்மையில தனது குடும்பத்தை அழைப்பது சம்பந்தமான உதவியைப்பெற வந்து ஒருவருடைய நிலையை தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அதாவது 1987ம் ஆண்டு ஜனவரி மாதம் இந்நாட்டுக்குத தஞ்சம் கோரி விண்ணப்பித்தவருக்கு 1989ம ஆண்டு முற்பகுதியில் தான் விசா வழங்கப்பட் டது. இவர் 5 வருடமாக இந்நாட்டில் தனது 3 பிள்ளைக ளையும் மனைவியையும் பிரிந்து வாழ்கின ரூர். கலவர நிலைமையில் இருக்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து பல கஸ்டங்களுக்கு மத்தியில் கொழும்பு வந்திருக்கின்ருர்கள். கொழும்பிலும் இவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. இச்சந்தர்ப் பத்தில் அவர்களை இங்கு அழைப்பதற்கு அத் தமிழ் அகதி இங்குள்ள உள் நாட்டு அலுவலகத் தின் குடிவரவுத் திணைக்களத்திற்கு விண்ணப் பித்த போது அதனைப் பரிசீலனை செய்வது மறுக்கப்பட்டுள்ளது.இதன் பின்பு தமிழ் அகதி நிலையம் அந்த அகதியின் சார்பில் உள்நாட்டுச் செயலாளர் திரு கெனத் கிளாக் அவர்களுக்கு எட்மன்ரன் பாராளுமன்ற உறுப்பினர் ஊடாக ஒரு விண்ணப்பத்தைச செய்துள்ளார்கள். இதற்குச் சாதகமான பதிலை தான் எதிர்பார்ப்பதாகத் தமிழ் அகதி யின் செயலாளர் தெரிவித்தார். குடும்பங்கள் இணைவது சம்பந்தமான கடிதங்களின் பிரதி களை குடிவரவு அமைச்சர் எட்மன்ரன் பாராளுமன்ற உறுப்பினர் பிரித்தானிய அகதிகள் பணியக நிர்வாகி, ஐக்கிய நாடுகள் சபைக்கான அகதிகள் ஆணை யாளருக்கும அனுப்பியிருக்கிருர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அகதிகள் குடும்பங்களுடன் இணையும் விடயத்தில் நியாயமும் மனிதாபிமானமும் உள்ள அணுகுமுறையைக் கையாளுங்கள்

**உள்நாட்டு செயலருக்கு தமிழ் அகதி நிலையம் கடிதம்**

தமது குடும்பங்களைப்பிரிந்து இந்நாட்டில் அகதிகளாக வாழும் பல தமிழ் அகதிகள் குடும்பங்களுடன் சேர்வது சம்பந்தமாக பிரித்தானிய அரசு கடைப்பிடிக்கும் முறைகள் தொடர்பாக பிரித் தானியா உள்நாட்டுச் செயலாளர் திரு கெனத் கிளார்க் அவர்களுக்கு தமிழ் அகதி நிலையத்தின் செயலாளர் கடிதமொன்றை எழுதியுள்ளார்.

1983ம் ஆண்டு தொடக்கம் இலங்கைத் தமிழர்கள் அதிகளாகப் பெருமளவு இங்கு வந்து குடியேறியுள்ளார்கள். இவர்களில் பலர் தமது சொந்தக் குடும்பங்களைப் பிரிந்து இங்கு வந்து இருக்கின்றார்கள். இவர்களில் பலருக்கு குடி வரவ விதிகளுக்குப்புறம்பான வகையில் விசா வழங்கப்பட்டு இருக்கின்றன. இவர்கள் தங்கள குடும்பங்களுடன் சேர்வதற்குத் தொடர்ச்சி யான 4 வருட விசாவழங்கப்பட்டிருக்கவேண்டு மெனக குடிவரவுத் திணைக்களம் தெரிவிக்கின்றது. ஆனால் பொதுவாகத் தஞ்சம் கோரி விண் ணப்பம் செய்து குறைந்தது2- 3 வருடங்களின் பின்னரே விசாவும் கிடைத்திருக்கின்றது. இதற்குரிய காரணம குடிவரவுத் திணைக்களத்தின் தஞ்சம் அளிக்கும பகுதியில் இது வரை காலம் வரை இருந்து வந்த அதிகாரிகள் பற்றுக் குறையும் அதிகமான விண்ணப்பங்களும் தான் காரணம் என ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றது. இதன் படி நோக்கினால் சிலருக்கு 5-6 வருடமாகியும திணைக்களம் எதிர்பார்க்கின்ற தொடர்ச்சியான 4 வருட விசா என்ற தகுதி இல்லை. இதனால் இவர்கள் குடும்பங்களுடன் சேர்வதற்கான விண்ணப்பங்கள பரிசீலனை செய்வது மறுக்கப் பட்டுள்ளது. இம்முறை நியாயமானதாகவும் மனிதாபிமானதாகவும் இல்லையென்று தனது கடிதத்தில் குறிப பிட்டதுடன் தொடர்ந்து தமிழ் மக்கள் தங்களது குடும்பவாழ்க்கையில் கணவன், மனைவி பிள்ளைகள் என்று அதிக அக்கறையும் பற்றும் கொண்டவர்கள் என்றும் மனோ தத்துவ ரீதியாக குடும்பங்கள் நீண்ட நாட்களாகப்பிரிந் திருப்பின் மிகப் பெரிய அளவிலான மனநிலைப் பாதிப்பையும கொள்கின்றார்கள் என்றும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுளளார்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

அகதியின் வளர்ச்சிக்கு எமது
வாழ்த்துக்களும் பங்களிப்பும்

MARKANDAN & CO

SOLICITORS
Empowered to Administer Oaths

THAMIL HOUSE
720, ROMFORD ROAD
MANOR PARK
LONDON E12 6BT

M.Markandan LL.B.

* ALL ASPECT OF IMMIGRATION MATTERS UP TO APPEALS TO EUROPEAN COURT OF HUMAN RIGHTS
* ALL TYPES OF CONVEYANCING
* LITIGATION - ALL COURTS CIVIL / CRIMINAL
* LANDLORDS/ TENANT MATTERS, MATRIMONIAL
* POLICE STATION ADVICE
* ALL D.S.S AND HOUSING BENEFIT MATTERS
* FREE ADVICE FOR 15 MINTUES ON THE FIRST ATTENCE

LEGAL AID
WE ARE ALWAYS FRIENDLY,
EASY TO TALK AND KEEN TO HELP
TEL: 081 - 514 8188
FAX: 081 -514 8303

வட லண்டன் வாழ் மக்களுக்கு ஓர் நற்செய்தி
உங்கள் மத்தியில் ஓர் புதிய வியாபார நிலையம்
இலங்கை உற்பத்திப் பொருட்கள் அனைத்தையும்
ஒரே இடத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

சீதா ஸ்ரோர்ஸ்

256, Fore Street, Edmonton,
LondonN18 2TY

- வியாபார நேரம் - வாரத்தின் எல்லா நாட்களும் காலை 8.00 மணி- 10.00 மணி
- உங்கள் தேவைகளான இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பண்டங்கள், மற்றும் பொருட்கள்
- இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கடலுணவு, மரக்கறிவகைகள்
- தமிழ் வாராந்த, மாதாந்த சஞ்சிகைகள்
- வீடியோ, ஓடியோ, கொம்பக்ட்டிஸ்க்
- Fax Service available both ways.

Tel : 081- 884 4979
Fax: 081- 807 5232

*Design & Printed by Golden Printers Tel & FaX: 081 - 509 0509*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org